1974 மார்ச் 25]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் தனியார் நிறுவனங்களில் சில இப்போது அலவன்ஸ் தந்துகொண்டிருக்கிறார்கள். சிம்சன் கம்பெனியில் முழு அளவில் கொடுக்கிறார்கள். ஆகவே, இதற்கு இடைக்காலத்திற்கு என்று திடீரென்று ஒரு சட்டம் தேவையில்லை என்று கருதுகிறோம்.

திரு. என். கே. பழனிசாமி: சார், ஒவ்வொரு கம்பெனிக்கும் ஸ்டான்டிங் ஆர்டர் இருக்கிறது. அது அந்தந்த கம்பெனியைப் பொறுத்தவரையில் தொழிலாளர்கள் வேலைக்கு எப்போது வரவேண்டும்; எப்போது போக வேண்டும் என்பதைப்பற்றி இருக்கிறது. அந்தச் சட்டத்தைத் திருத்தி இந்த சஸ்பென்ட் பீரியடுக்கு பணம் கொடுக்க வேண்டுமென்று சொல்வது சரியாக இருக்குமா? சஸ்பென்ட் செய்யப்பட்டது நியாயமாகவும் இருக்கலாம், அநியாயமாகவும் இருக்கலாம். அது பரிசீலனை செய்து முடிந்தபிறகுதான் தெரிய வரும். ஆகவே, இப்போது இருக்கின்ற ஸ்டான்டிங் ஆர்டரைத் திருத்தாமல், தனியாக ஒரு சட்டம் கொண்டுவந்து சஸ்பென்ட் பீரியடுக்கு ஈட்டுத் தொகை கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சட்டம் இயற்றப் படும்போது கனம் அங்கத்தினருடைய ஆலோசனை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(முற்பகல் 9-30)

Lands of Theosophical Society, Madras.

* 602 *Q*.—THIRU N. D5NNIS: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether a large portion of land belonging to the Theosophical Society at Adayar, in Madras City is being acquired by the Government; and

(*b*) if so the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். டென்னிஸ்: அதற்கான ப்ரபோசல் ஏதாவது அரசிடம் இருந்ததா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: முதலில் அப்படிப்பட்ட ஓரெண்ணம் அரசிடம் இருந்தது. அரசுக்குத் தெரிவிக்காமல் விற்பதில்லை—என்கிற சில நிபந்தனைகளை ஒப்பந்தம் மூலமாக ஏற்படுத்திக்கொண்டு, தங்களிடமே அந்த

நிலங்களை விட்டுவிடும்படி கேட்டுக்கொண்டார்கள். அந்த நிபந்தனைகளுக் குட்பட்டு அந்த நிலங்களை அவர்களே வைத்துக்கொள்ளலாம் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

Rent for houses under Slum Clearance Board.

*603. *Q.*—Dr. H. V. HANDE : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the rent for the houses allotted through Slum Clearance Board has been raised from Rs. 10 to Rs. 35 per month; and

(*b*) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: அரசினால் கொடுக்கப்படுகிற வீடுகளுக்கு எந்த அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு மின்சாரம், தண்ணீர் வசதி இல்லாத வீடுகளுக்கு மாதம் 10 ரூபாய். மின்சாரம், தண்ணீர் வசதி உள்ள இடங்களுக்கு நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு 15 ரூபாய். தண்ணீர் வசதி மட்டும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு நிலையான மாதாந்திர வருமானம் இல்லாதவர்களுக்கு மாதம் ரூ. 12. மின்சார வசதி மட்டும் இருக்கக்கூடிய வீடுகளுக்கு ரூ. 13.

Sandalwood oil.

*604. *Q.*—Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Electricity be pleased to state whether there is any proposal to set up a factory under the Public Sector to extract sandalwood oil in this State?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஆரம்பிக்க ஒரு திட்டம் பரிசிலனையில் உள்ளது.

திரு. என். கே. பழனிசாமி: ஏற்கனவே நம் மாநிலத்தில் மைசூரைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தியாகக் கூடிய சந்தன மரத்தில் இருந்து சந்தன எண்ணெய், சோப்பு, இதர கைவினைப் பொருள்களைத் தயாரிக்க ஒரு தொழிற்சாலை அமைப்பதில் என்ன தயக்கம்?

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS